LITERARY FINDINGS
INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH
ISSN : 2278-2311

# பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

சேலம்

(பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

(Recognized under section 2(f) & 12(B) of UGC Act, 1956, Accredited by NAAC & an ISO 9001:2008 Certified Institution)

தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம் அக்டோபர், 04 - 2019

## இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

## சான்றிதழ்

திரு / திருமதி / செல்வி / முனைவர் இரா.பொன்னி என்பவர் / என்பவர்களால் எழுதப்பட்ட

தூது செல்வதில் பாணர்களின் பங்களிப்பு

என்ற ஆய்வுக் கட்டுரையானது லிட்டெரி ஃபைண்டிங்ஸ் – பன்னாட்டுத் தமிழியல் ஆய்வு இதழில் (அக்டோபர்– 2019, மலர்–8, இதழ்–9, ISSN: 2278-2311 ) பிரசுரிக்கப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைப்பாளர் | முதல்வர் | செயலாளர் | தாளாளர் | பதிப்பாசிரியர்

Scanned with CamScanner

# LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN 2278-2311

## பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது

சேலம்.


தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

9

பன்னாட்டுக் கருத்தரங்கம் அக்டோபர்-04-2019

## இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்



OCTOBER - 2019

visit us : www.kongunadupublications.com

kongunadupublications@gmail.com

Scanned with CamScanner

LFS

LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN: 2278-2311

VOL: 8 OCTOBER - 2019 ISSUE: 9

PUBLISHING EDITOR

**Nall Natarajan**

*Kongunadu Publications (India) Private Limited, Erode.*

kongunadupublications@gmail.com

பதிப்பாசிரியர்

நல் நடராசன்

*கொங்குநாடு பப்ளிகேஷன்ஸ் (இந்தியா) பி.லிட், ஈரோடு.*

kongunadupublications@gmail.com

EDITOR

**Dr. B.Sankareswari**

*Madurai Kamaraj University, Madurai.*

sankaritamil@gmail.com

ஆசிரியர்

முனைவர் பா.சங்கரேஸ்வரி

*மதுரை காமராசர்பல்கலைக்கழகம், மதுரை.*

sankaritamil@gmail.com

EDITORIAL AND ADVISORY BOARD

**Dr.A.Govindarajan**

*Bharathidasan University, Tiruchirappalli.*

govindarajan.bdu@gmail.com

**Dr.C.Karthikeyan**

*Tamil Nadu Open University, Chennai.*

karthikeyan251973@gmail.com

**A.Mariya Sebasthiyan**

*VIT University, Velur.*

maryasepastin.a@vit.ac.in

**Dr. K.Paulin Preetha Jebaselvi**

*Bishop Heber College, Trichy.*

kpauline@bhu.edu.in

**Dr.T.K Anuradha**

*Trinity College For Women, Namakkal.*

anukeerthigan@gmail.com

**Dr.Paramasivam Muthuswamy**

*Malasyia University, Malasyia.*

mparam98@gmail.com

**R.F.Arooz**

*Raapa International Campus, Sri Lanka.*

raapa.arooz@gmail.com

**Dr.K.Gayathiri**

*Government Arts College, C.Mutlur, Chidambaram.*

gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**

*University of Malaya,Malaysia,*

skumaran.um@gmail.com

ஆசிரியர் குழு

முனைவர் அ.கோவிந்தராஜன்

*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,திருச்சிராப்பள்ளி.*

govindarajan.bdu@gmail.com

முனைவர் சி கார்த்திகேயன்

*தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*

karthikeyan251973@gmail.com

அ.மரிய செபஸ்தியான்

*வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்.*

maryasepastin.a@vit.ac.in

முனைவர் க.பாலின் பிரீதா ஜெபசெல்வி

*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.*

kpauline@bhu.edu.in

முனைவர் தா.க.அனுராதா

*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*

anukeerthigan@gmail.com

முனைவர் பரமசிவம் முத்துசாமி

*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*

mparam98@gmail.com

R.F.அரூஸ்

*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*

raapa.arooz@gmail.com

முனைவர் க.காயத்ரி

*அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்.*

*gayathiripraba1981@gmail.com*

முனைவர் எஸ்.குமரன்

*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா*

*skumaran.um@gmail.com*

Scanned with CamScanner

16. சங்க இலக்கியத்தில் ஏறுதழுவுதல்
*முனைவர் மு.ஹரிகிருஷ்ணன் - 39

17. மு.ராமசாமி நாடகங்களில் பெண்கள்
*திருமதி இர.அருள்அரசி - 43

18. குறிஞ்சிக்கலியில் புறம் பேசுதல்
*சோ.பாக்கியராஜ" - 46

19. மீள்வாசிப்பில் பள்ளு இலக்கியம்
*முனைவர் நா.ரேணுகா - 48

20. சங்க இலக்கியத்தில் வாழ்வியல்
*முனைவர் இரா.டயானா கிறிஸ்டி - 51

21. இலக்கியங்கள் இயம்பும் வாழ்வியல் வழித்தடங்கள்
*இரா.ஏஞ்சல் - 55

22. இரா.நடராசன் சிறுகதைகளில் ஒடுக்கப்பட்டோர் நிலை
*தா.சித்ராதேவி - 58

23. நாடகம் நவிலும் நல்லறம்
*க.ரேவதி - 61

24. இலக்கியங்களில் பரதவர் வாழ்வு
*திருமதி ரம்யா - 63

25. தூது செல்வதில் பாணர்களின் பங்களிப்பு
*முனைவர் இரா.பொன்னி - 67

26. முத்தொள்ளாயிரப் பாடல்களில் வாழ்வியல்
*முனைவர் ஆ.மெர்சி ஆஞ்சலா - 70

27. குலசேகராழ்வார் பாடல்களில் மெய்யியல் சிந்தனைகள்
*ப.கௌரி - 73

28. நற்றிணையில் உளவியல்
*அ.சசிகலாதேவி - 75

29. நம்பியகப்பொருள் உணர்த்தும் வாழ்வியல்
*முனைவர் கி.சுதா - 77

30. அறிவுமதியின் கவிதையில் மொழிப்பற்று
*ச.சந்தியா - 81


Scanned with CamScanner

# தூது செல்வதில் பாணர்களின் பங்களிப்பு

*முனைவர் இரா.பொன்னி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாத்திமா கல்லூரி, மதுரை.

முத்தமிழுக்கு இலக்கிய வளம் சேர்ப்பதில் இன்றியமையாத பங்கு கொள்வதில் ஒன்று இசையாகும். இசையின் பயனைக் கொண்டு வாழும் கலைஞர்கள் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்றோர். இவ்விசைவாணர்களின் வாழ்வாதாரம் இசை மட்டுமே. இவர்கள் மன்னர்கள், வள்ளல்களிடம் பாடிப் பரிசில் பல பெற்று தம்மைப் போன்றோரிடம் ஆற்றுவித்தும் வருவர். இதனை,

> கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறிஇச்
> சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் (தொல்.பொருள். புற.36)

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்கிச் செல்கிறது. இசைக்கருவியிலிருந்து வெளிப்படுவது பண் ஆகும். 'பண்ணிசையுடன் பாடுவர் பாணர்.பண்ணிசை பொருந்த ஆடுபவர் பொருநர். பாடற்பொருளை மெய்படுத்திக் காட்டி ஆடுபவர் விறலியர். கதைப்பாட்டுடன் ஆடுபவர் கூத்தர்.' என்று கூறுவர். சிறுபாணன் ஏழு நரம்புகள் கொண்ட சீறியாழ் மீட்டிக்கொண்டு பாடுபவர்கள். பெரும்பாணன் 21 நரம்புகள் கொண்ட பேரியாழ் மீட்டிக்கொண்டு பாடுபவர்கள். தலைமக்களைச் சார்ந்து வாழும் இப்பாணர்கள் தம் இசைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் பணியாற்றினாலும் தூதராக செயலாற்றுவதில் பெரும்பங்காற்றுகின்றனர். அகத்தூதராகவும் புறத்தூதுவராகவும் பணியாற்றும் பாணர்களின் பங்களிப்பினை ஆராய்வதே இக்கட்டுரை.

**பாணனும் பாடினியும்**

பாணர்கள் தம் வறுமையைத் தீர்த்துக் கொள்ள 'பழுமரம் தேரும் பறவை போல' புரவலர்களை நோக்கியே சென்றனர்.

> பழுமரம் தேரும் பறவை போலக்
> கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
> புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண! (பெரும்.17-22)

மன்னனது கொடைச்சிறப்பையும், போர்ச்சிறப்பையும் பாடுவதே பாணரின் மரபு. யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என்றும் வகைப்படுத்துவர். இப்பாணனின் மனைவி பாடினி ஆவாள். இவளும் பண்ணோடு கூடிய பாட்டினை இசைப்பவளாக விளங்குகிறாள். பாடினியர் கூத்து மூலம் அபிநயங்கள் காட்டி ஆடுவார்கள். பாணரைப் போலவே, யாழெடுத்து இனிய இசையை மீட்டுவார்கள்.

பாடினியரின் வேறு பெயர்கள்: பாடினிகளுக்குப் பாண்மகள், விறலி, பாடினி, மதங்கி, பாட்டி, பாடன்மகடு எனப் பல பெயர்கள் இருந்தன.

**பாணரும் தூதுவும்**

அகவொழுக்கத்தூதுவர் புறவொழுக்கத்தூதுவர் என இருவகைப்படுத்தலாம். அகவொழுக்கத் தின்கண் தூது செல்பவர்களை,

> தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
> பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
> கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
> யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப. (தொல் .1140)

என்று தொல்காப்பியம் விளக்கம் தருகிறது.

களவு வாழ்க்கையில் துணையாக தூது செல்பவர்கள் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி என்னும் அறுவரும் ஆவர்.

கற்பு வாழ்க்கையில் துணையாக தூது செல்பவர்கள் பாணன், கூத்தன், விறலி, அறிவர், கண்டோர், அறுவரும் ஆவர். இதனை,

> ..... புனல்வயல் ஊரற்குத்
> தூதாய்த் திரியும் பாண்மகனே (ஐந்திணை ஐம்பது)

எனும் ஐந்திணை ஐம்பது வரிகள் மெய்ப்பிக்கும். தலைமக்களிடையே பிரிவு ஏற்படும்போது அதனைத் தீர்க்கும் வாயிலாக இவர்கள் விளங்குகின்றனர். புறத்தூதுவர்கள் மன்னன், வள்ளல்களை அறிவுறுத்தவும், போர்க்கள நிகழ்வுகள் குறித்தும் பாடுவர்



Scanned with CamScanner